**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, LALGUDI.**

**Case No. CC.No. 38 of 2025**

**Prosecution Witness : PW6**

| | | | |
|---|---|---|---|
| **Name** | **:** ஜார்ஜ் துரை | **Taluk** | **:** |
| **Father's Name** | **:** | **Calling** | **:** |
| **Village** | **:** | **Age** | **:** |

**(A1, A2 Present)**

**Dated. 01.07.2026**

**முதல் விசாரணை**

நான் தற்போது நெடுஞ்சாலைத்துறை ரோந்து எண். 1 சமயபுரத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கு சம்பவத்தின் போது காணக்கிளியநல்லூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வந்தேன். கடந்த 27.09.2024ம் தேதி நான் நிலைய பொறுப்பில் இருந்தபோது இலால்குடி அரசு மருத்துவமனையில் இருந்து வரப்பெற்ற தகவலை பெற்று அங்கு சென்று மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த அருணாதேவி என்பவரிடமிருந்து புகார் வாக்குமூலம் பெற்று பின் நிலையம் வந்து மனு ரசீ எண். 369/2024 வழங்கி விசாரணைக்கு பின்பு காவல் நிலைய குற்ற எண். 152/2024 BNS 296(b), 115(2), 351(2) r/w 4 of TNPHW Actன் கீழ் 15.00 மணிக்கு 30.09.2024ம் தேதி வழக்கினை பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.2/அ.சா.6** ஆகும். வழக்கு கோப்பினை விசாரணைக்கு எடுத்துக் கொண்டு 30.09.2024ம் தேதி மதியம் சுமார் 16.30 மணியளவில்

சம்பவ இடம் சென்று சாட்சிகள் சரண்ராஜ், கருணா தினேஷ் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தேன். அந்த பார்வை மகஜர் **அ.சா.ஆ.3/அ.சா.6** ஆகும். மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.4/அ.சா.6** ஆகும். பார்வை மகஜர் சாட்சிகளை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். பின்பு பட்டியல் சாட்சிகளான 1 முதல் 4 வரை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். என்னுடைய விசாரணையில் சம்பவம் உண்மை என்று தெரிந்து எதிரிகளை தேடி வந்த நிலையில் இவ்வழக்கின் எதிரிகள் மாண்புமி சென்னை உயர்நீதிமன்றம், மதுரை கிளையில் முன்ஜாமீன் பெற்றதால் அவர்களை கைது செய்யவில்லை. இவ்வழக்கில் காயம்பட்ட அ.சா.1 க்கு சிகிச்சை அளித்த மருத்துவர் ஜெயந்தி என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்று பெற்றேன். இலால்குடி அரசு மருத்துவமனையில் அ.சா.1 க்கு வழங்கப்பட்ட விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று **அ.சா.ஆ.5/அ.சா.6** ஆகும். நான் பணிமாறுதல் ஆகிவிட்டதால் வழக்கு கோப்பினை மேல் விசாரணைக்காக உதவி ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்)</u>**

அ.சா.1 புகாரிலோ, என்னுடைய விசாரணையிலோ 1ம் எதிரி தன்னை மானப்பங்கப்படுத்தியதாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா.1 புகாரிலோ, என்னுடைய விசாரணையிலோ அவருடைய வலது காது அறுந்து தோடு கீழே விழுந்துவிட்டதாக சொல்லியுள்ளாரா என்றால் இல்லை. அ.சா.1 அவருடைய முதல் விசாரணையில் மேற்சொன்ன

விவரங்களை தன்னுடைய புகாரில் சொல்லியுள்ளேன் என்றும், அந்த விவரங்கள் இல்லாமல் ஒரு புகார் இருந்தால் அது தன்னுடைய புகார் இல்லை என்றும் சாட்சியம் அளித்திருந்தால் அது சரியா, தவறா என்றால் தவறு ஆகும். அ.சா.1 மேற்சொன்ன விவரங்களை குறிப்பிட்டு ஒரு புகார் என்னிடம் கொடுத்தார் என்றாலும், அந்த புகாரை மறைத்துவிட்டு ஒரு பொய்யான புகாரின் அடிப்படையில் நான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் என்றாலும் சரியல்ல. அ.சா.1 அவருடைய புகாரிலும், என்னுடைய விசாரணையிலும் நான் எங்கள் ஊரை சேர்ந்த துணைத் தலைவர் ஜெகநாதனிடம் பேசிக் கொண்டிருக்கும் போது சம்பவம் நடந்தது என சொல்லியுள்ள நிலையில் ஜெகநாதன் என்பவரை நான் விசாரணை செய்தேனா என்றால் இல்லை. மாதிரி வரைபடத்தில் பாலா என்பவரின் வீடு குறிப்பிட்டு காண்பிக்கப்படவில்லை என்றால் சரிதான். மாதிரி வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள வீட்டை சேர்ந்த நபர்களை நான் இந்த வழக்கில் விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை காலம் எண். 12 ல் 27.09.024 அன்று நான் நிலைய பொறுப்பில் இருந்த போது, இலால்குடி அரசு மருத்துவமனையிலிருந்து வரப்பெற்ற தகவலை பெற்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த அருணாதேவி என்பவரிடம் புகார் வாக்குமூலம் பெற்றேன் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை காலம் எண். 3 B ல் காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 30.09.2024 அன்று 15 மணி என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். காணக்கிளியநல்லூர் காவல் நிலையத்திலிருந்து இலால்குடி அரசு மருத்துவமனை சுமார் 30 கி.மீ தொலைவில் உள்ளது என்றால் சரிதான். நான் எந்த வாகனத்தில் அ.சா.1 டம் வாக்குமூலம் பெற லால்குடி அரசு

மருத்துவமனைக்கு வந்தேன் என்றால் இருசக்கர வாகனத்தில் நான் மட்டும் வந்தேன். நான் அ.சா.1 டம் புகார் வாக்குமூலம் பெற்றுவிட்டு பின்பு காவல் நிலையத்திற்கு வந்து மனு ரசீது வழங்கினேன் என்றால் சரிதான். மனு ரசீது எண். 369/2024 குற்ற இறுதி அறிக்கையுடன் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டதா என்றால் இல்லை. அ.சா.1 எதிரிகள் தன்னை விளக்கமாற்றால் அடித்ததால் தனது சேலை கிழிந்துவிட்டது என புகாரில் சொல்லியுள்ள நிலையில் எதிரிகளிடமிருந்து விளக்காறு மற்றும் அ.சா.1 ன் கிழிந்த சேலை ஆகியவற்றை கைப்பற்றினேனா என்றால் இல்லை. அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலத்தில் புகார்தாரரின் கையொப்பத்திற்கு கீழே எழுதப்பட்ட விவரங்கள் காவல் நிலையத்திற்கு வந்து எழுதப்பட்டவை என்றால் சரிதான். அ.சா.1 க்கு வழங்கப்பட்ட விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழில் அ.சா.1 26.09.2024 அன்று மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு பின்பு 29.09.2024 அன்று விடுவிப்பு செய்யப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 29.09.2024 அன்று அ.சா.1 மருத்துவமனையில் விடுவிப்பு செய்யப்பட்ட நிலையில் அவர் 30.09.2024 அன்று மருத்துவமனையில் உள்நோயாளியாக இருக்க வாய்ப்பு இல்லை என்றால் சரிதான். அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலம் என்னால் எழுதப்படவில்லை என்றால் சரிதான். எதிரிகளுக்கும், வழக்கு சம்பவத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்கு ஏற்றவாறு காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. அ.,சா.1 காதல் திருமணம் செய்து கொண்டதால் அவருக்கும், எதிரிகளுக்கும் இடையே இருந்த முன் விரோதத்தின் காரணமாக அ.சா.1 ஒரு பொய்யான புகாரை கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. அ.சா.1 க்கும், அவரது சகோதரி

வளர்மதி என்பவருக்கும் ஏற்பட்ட வாக்குவாதத்தின் போது அ.சா.1 கீழே விழுந்ததால் அவருக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல.

ஒப்பம்/–சு.அருணாச்சலம்,
நீதித்துறை நடுவர்,
இலால்குடி

/உண்மை நகல்/ ARUNACHALAM Digitally signed by ARUNACHALAM Date: 2026.07.01 17:10:45 +0530

நீதித்துறை நடுவர்,
இலால்குடி